தினமணி

# வறுமையை ஒழிக்கும் வழி இதுதானா?

உதயை மு.வீரையன்

First Published : 26 Mar 2012 01:27:34 AM IST

இந்தியப் பொருளாதாரத்தைச் சரிவிலிருந்து மீட்டு கடுமையான முடிவுகளை எடுக்கலாம் என்றால், கூட்டணி அரசாக இருப்பதால் ஏற்படும் நெருக்கடிகள் அந்தச் செயலையே மேலும் கடுமையாக்கி விடுகிறது. எந்த ஒரு முடிவாக இருந்தாலும் கருத்தொற்றுமை அடிப்படையில்தான் எட்ட வேண்டியிருக்கிறது - இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையில்கூறியுள்ளார்.

2008 வரை தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி வீதம் சராசரியாக 9 விழுக்காடு இருந்தது. 2008-09 இல் அது 6.7 விழுக்காடாக குறைந்துவிட்டது. நிகழ் நிதியாண்டில் அது 6.9 விழுக்காடாக இருக்கிறது. அதற்கு முந்தைய இரண்டாண்டுகளில் அது 8.4 விழுக்காடாக இருந்தது. அடுத்த நிதியாண்டில் இது 7.6 விழுக்காடாக உயரும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றும் அவர் கூறுகிறார்.

இந்தப் புள்ளிவிவரங்கள் பொருளாதார மேதையின் ஆற்றலை வெளிப்படுத்தலாம். பொருளாதார ஏற்றத்தாழ்வால் சரிந்துவரும் தேசத்தைத் தூக்கி நிறுத்தி விடாது. ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி விடாது.

இந்திய அரசமைப்புச் சட்டம், குடிமக்களுக்குச் சில அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. அதுபோலவே தங்கள் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள் கிடைத்திடச் செய்ய வேண்டியது அரசின் கடமையாகிறது.

அந்தக் கடமைகளை மறந்துவிட்டு அல்லது புறக்கணித்துவிட்டு நாட்டு மக்கள் செய்ய வேண்டிய கடமைகளை மட்டும் எதிர்பார்ப்பது என்ன நியாயம்?

அப்படி என்ன நடந்துவிட்டது என்று கேட்கிறீர்களா? பிரதமர் மன்மோகன் சிங் தலைவராகவும் மான்டேக் சிங் அலுவாலியாவைத் துணைத் தலைவராகவும் கொண்ட மத்திய திட்டக்குழு மார்ச் 19 அன்று ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்தியாவில் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வோர் எண்ணிக்கை 7.3 விழுக்காடு அளவுக்குக் குறைந்துவிட்டதாக ஓர் ஆய்வு முடிவை வெளியிட்டு வியப்பை ஏற்படுத்தி விட்டது.

இந்தியாவில் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வோர் எண்ணிக்கை 2010-11 ஆம் ஆண்டில் 29.8 விழுக்காடாக உள்ளது. 2004-05 ஆம் ஆண்டில் இந்த விகிதம் 37.2 விழுக்காடாக இருந்தது. இந்த மாபெரும் முன்னேற்றம் எப்படி ஏற்பட்டது? இந்த மந்திரக்கோலின் மகிமையைக் கேட்டால் சிரிப்புதான் வரும்.

நகர்ப்புறங்களில் தினசரி கூலி ரூ.28.65க்கு மேல் ஊதியம் பெறுபவர்களும் கிராமப்பகுதிகளில் ரூ.22.42க்கு மேல் ஊதியம் பெறுபவர்களும் வறுமைக்கோட்டுக்கு மேலே உள்ளவர்களாக கணக்கிடப்பட்டுள்ளனர். இவர்கள் ஏழையர் பட்டியலில் வரமாட்டார்கள்.

இதன்படி நகர்ப்பகுதிகளில் மாத ஊதியம் ரூ.859.60 பெறுவோரும் கிராமப்பகுதிகளில் மாதம் ரூ.672.80 சம்பாதிப்பவர்களும் வறுமைக்கோட்டுக்கு மேலே உள்ளவர்கள் என கணக்கிடப்பட்டுள்ளனர்.

கடந்த 2011 செப்டம்பர் மாதம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணத்தில் கிராமப்புறங்களில் நாள் ஒன்றுக்கு ரூ.26 சம்பாதிப்பவர்களும் நகர்ப்புறத்தில் ரூ.32 சம்பாதிப்பவர்களும் வறுமைக்கோட்டுக்கு மேலே உள்ளவர்கள் என்று திட்டக்குழு கூறியிருந்தது. இந்தத் திட்டக்குழுவின் அறிவிப்பைக் கேட்டு அன்று நீதிமன்றமே சிரித்தது.

ஒரு வேளை உணவுக்கே போதாத இந்தத் தொகையைக் கொண்டு ஒரு நாளை எப்படி ஓட்டுவது? உடை, உறைவிடம், மருத்துவச் செலவு, பிள்ளைகளின் கல்வி, நல்லது கெட்டது - இவைகளையெல்லாம் சமாளிக்கப் பணம் வேண்டாமா? திட்டக்குழுவின் அறிவிப்பைக் கேட்டு மக்கள் அதிர்ச்சியடைந்து போனார்கள்.

இப்போது இந்தத் தொகையையும் குறைத்துவிட்டது. என்ன காரணம் என்றும் கூறவில்லை. புள்ளிவிவரங்களைக் கொண்டு ஏழ்மையை விரட்டுகிறார்கள். பசிக்கிற வயிற்றுக்குத் தேவை உணவே தவிர, புள்ளிவிவரங்கள் அல்ல என்பதைத் திட்டக்குழுவுக்குப் புரிய வைப்பது யார்? "ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது இந்தப் பொருளாதார மேதைகளுக்குத் தெரியாதா? உணவுப் பொருள் மீதான பணவீக்கம் குறையவில்லை. உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள் வறுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கின்ற செய்திகள் வராத நாள் இல்லை. இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் ஒரு திட்டக்குழு செயல்படுவதுதான் வேடிக்கை.

நமது நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி இதுபற்றி தில்லியில் நடைபெற்ற இந்தியத் தொழில் வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் பேசியுள்ளார். ""நாட்டின் நிதி நிலைமை கவலையளிக்கும் விதமாகவே இருக்கிறது. முக்கியமான சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவது நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. நிதிப் பற்றாக்குறை பிரச்னையைத் தீர்க்க அடுத்த சில மாதங்களில் அரசு சில கடினமான முடிவுகளை எடுக்க இருக்கிறது.

நிதிப் பற்றாக்குறையை நம்மால் தீர்க்க முடியுமா? என்பது இப்போது கேள்வியல்ல. இது ஒட்டுமொத்தமாக தேச நலன் சார்ந்த விஷயம். இதில் நமது ஒவ்வொருவரது பங்களிப்பும்

இருக்கிறது..." என்று அவர் கூறியுள்ளார். இனி வரப்போகிற நிதி நெருக்கடிகளுக்கு நிதியமைச்சர் செய்யும் முன் அறிவிப்பு இது.

நாள்தோறும் விலைவாசிகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன; பெருகிவரும் ஊழலையும், லஞ்சத்தையும் தடுக்க முடியவில்லை. வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தைப் பற்றித் தெரிந்திருந்தும் சொந்த நாட்டுக்குக் கொண்டுவர எண்ணம் இல்லை; வங்கிகளில் வாங்கப்பட்ட "வாராக் கடன்கள்' வசூலிப்பதற்கு முயற்சிகள் இல்லை. இதற்குப் பின்னால் உள்ள மர்மங்கள் பற்றி வெளியிடுவதும் இல்லை. அவை ரகசியங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன.

இந்தியாவில் உள்ள பெரும் பணம் படைத்தவர்களின் பட்டியலை அமெரிக்காவின் முன்னணி இதழான ஃபோர்ப்ஸ் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அதில், "இந்தியாவின் பணக்காரர்களைப் பொருத்தவரை இந்த ஆண்டு கொந்தளிப்பான ஆண்டாகும். இந்தியாவின் பொருளாதாரம் 8 விழுக்காடாக உள்ளது. பல்வேறு ஊழல் புகார்கள், உயர்ந்து வரும் பணவீக்கம் உள்ள நிலையிலும் பணக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், "இந்தியாவில் பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகரித்து வருகிறது' என்று ஐ.நா.வின் மனிதவள மேம்பாட்டுத் திட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த முரண்பட்ட நிலையைப் பற்றி அரசாங்கமும், திட்டக்குழுவும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இதை மேலும் மேலும் வளர்த்தெடுக்கவும், பிரச்னையை மூடி மறைக்கவுமே திட்டமிடப்படுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நகர்ப்புறத்தில் ஒரு நாளைக்கு ரூ. 28.65-க்கு மேல் சம்பாதிப்பவரும், கிராமங்களில் ரூ. 22.42-க்கு மேல் சம்பாதிப்பவரும் வறுமைக் கோட்டிலிருந்து மீண்டவர்கள் என்று டெண்டுல்கர் தலைமையிலான குழு அளித்த அறிக்கையை மத்திய திட்டக்குழு ஏற்றுக் கொண்டிருப்பதற்காக மான்டேக் சிங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாகச் சாடினர்; அவரை அந்தப் பதவியிலிருந்தே அகற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதைப் பற்றி திட்டக்குழுத் துணைத்தலைவர், ""28 ரூபாய், 22 ரூபாய் என்ற கணக்கு வேண்டுமானால் துல்லியமாக இல்லாமல் இருக்கலாம். நாட்டில் வறுமை குறைந்திருக்கிறது. பட்டினிச் சாவுகள் இல்லை என்பது உண்மையே. இதை வேறுவிதமாகக் கணக்கிட்டாலும் தெரிந்து கொள்ளலாம்" என்று அலட்சியமாகக் கூறியுள்ளார்.

வறுமைக் கோட்டை நிர்ணயிக்கத்தான் இந்த அளவே தவிர, இதை அடிப்படையாக வைத்து எந்தத் திட்டமும் தீட்டப்படுவதில்லை என்றும் கூறியுள்ளார். வேறு எதற்கு இந்தக் கணக்கு? இந்தியாவில் ஏழ்மையை ஒழித்துவிட்டோம் என்று உலகத்தை நம்ப வைப்பதற்காகவா?

இந்த அளவுகோல் மூலம் 2004-05-ம் ஆண்டைவிட 2009-10-ம் ஆண்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வோர் எண்ணிக்கை 7.3 விழுக்காடு குறைந்துவிட்டது என்று மத்திய அரசும் கூறுகிறது.

அதாவது இந்தியாவில் ஏழைகளின் எண்ணிக்கை 40.72 கோடியிலிருந்து 34.47 கோடியாகக் குறைந்துவிட்டது என்று நம்மை நம்பச் செய்கிறது.

ஏற்கெனவே இந்தியாவில் உள்ள குழந்தைகளில் 42 விழுக்காட்டினர் ஊட்டச்சத்து இன்றி வாடுவதாகவும், இது தேசிய அவமானம் என்றும் கூறிய பிரதமருக்கு இது தெரியாதா? தெரிவிக்கப்பட இல்லையா? எப்படியும் மக்களை ஏமாற்றலாம் என்பதற்கு இப்படியும் ஒரு வழி உருவாக்கப்பட்டிருக்கிறது. ""இந்த மோசடியான வறுமைக்கோடு குறித்த அளவீடு மிகவும் தவறானது. எதார்த்தத்தைக் கணக்கில் கொள்ளாதது. உடனடியாக இந்த அர்த்தமற்ற அளவீடு மாற்றப்பட வேண்டும்" என்று வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் கருத்து தெரிவித்துள்ளார்.

இடைவிடாத பிரசாரத்தாலும் மக்களை மயக்கிவிடலாம் என்பது நடைமுறையாகிவிட்டது; ஏழை எளிய பாமர மக்கள் நிறைந்த ஒரு நாட்டில் ஆட்சியாளர்கள் சொல்வதெல்லாம் வேதம்; செய்வதெல்லாம் வெற்றியே!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு ஏழ்மையை ஒழித்து, வளமான வாழ்வைத் தருவார்கள் என்று வாக்களித்த மக்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை; ஆனால், ஏழ்மையை ஒழிப்பதற்குப் பதில் ஏழைகளையே ஒழித்துக் கட்டுவதற்குத் திட்டம் போடலாமா? வறுமையை ஒழிக்கும் வழி இதுதானா? பலரைச் சில காலம் ஏமாற்றலாம்; சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்; ஆனால், எல்லோரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது.

## டெல்டா பகுதிகளில் உளுந்து விலை வீழ்ச்சி!

<u>த.தேவராஜ்</u>

First Published : 26 Mar 2012 01:57:44 AM IST



சிதம்பரம் வட்டம் பரங்கிப்பேட்டையை அடுத்த வயலாமூர் கிராமத்தில், 35 நாள் பயிராக உள்ள மானாவாரி உளுந்து.

கடலூர், மார்ச் 25: கடலூர் மாவட்ட டெல்டா பாசனப் பகுதிகளில் உளுந்து அறுவடை முடிவடைய உள்ளது. உளுந்து விவசாயிகளுக்கு இந்த ஆண்டு மகசூலும் திருப்திகரமாக இல்லை, விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் (சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் தாலுகாக்கள் மற்றும் கடலூர் தாலுகாவின் ஒருபகுதி) 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள், காவிரிப் பாசனப் பகுதிகளாகும். கடலூர் மாவட்ட டெல்டா பாசனப் பகுதிகள் முழுவதிலும், சம்பா நெல் அறுவடை தொடங்குவதற்கு 10 நாள்களுக்கு முன், (ஜனவரி முதல் வாரத்தில்), மானாவாரி உளுந்து ஊடுபயிராக விதைத்துவிடுவது பாரம்பரியமான விவசாயம்.

ஆனால் கர்நாடகத்துடன் காவிரி நதிநீர்ப் பிரச்னை தொடங்கியபின், மேட்டூர் அணை பாசனத்துக்கு திறப்பதில், ஆண்டுதோறும் ஏற்பட்டுவரும் காலதாமதம், சம்பா நெல் சாகுபடியை பின்னுக்குத் தள்ளிவிடுகிறது. இதனால் ஊடுபயிராக மானாவாரி உளுந்து சாகுபடியும் பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு சம்பா பாசனத்துக்கு காவிரி நீர் உரிய நேரத்தில் கிடைத்ததால், சுமார் 70 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி உளுந்து, ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டிருந்தது. டெல்டா பாசனப் பகுதிகளில் உளுந்து அறுவடை இன்னும் ஒரு வாரத்தில் முடிவடைய இருக்கிறது.

ஆனால் உளுந்து மகசூல் விவசாயிகளை மகிழ்விப்பதாக அமையவில்லை. வழக்கமாக ஏக்கருக்கு 200 கிலோ வரை உளுந்து கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு டி.ஏ.பி. கரைசல் உரிய நேரத்தில் தெளிக்க முடியாமல் போனது உள்ளிட்ட பல காரணங்களால், அதிகபட்சம் ஏக்கருக்கு 100 கிலோ உளுந்துதான் கிடைத்து இருப்பதாக, விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். உளுந்து விலையும் இவ்வாண்டு வீழ்ச்சி அடைந்து கிடப்பதாக விவசாயிகள் புலம்புகிறார்கள்.

கடந்த ஆண்டு டெல்டா பாசனப் பகுதிகளில் மானாவாரி உளுந்து மூட்டைக்கு (100 கிலோ) ரூ.5,200 வரை விலை கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு மூட்டைக்கு அதிகபட்ச விலையே ரூ.3,400தான் என்றும், இதே மானாவாரி உளுந்துக்கு விருதுநகரில் தற்போது ரூ.5,200 வரை விலை கிடைத்து வருவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர். கடலூர் டெல்டா பாசனப் பகுதி விவசாயிகளிடம் உளுந்து கொள்முதல் செய்ய, சிதம்பரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வசதி இல்லை. இதனால் தனியார் வியாபாரிகள் போட்டியின்றி குறைந்த விலைக்கு உளுந்து கொள்முதல் செய்கிறார்கள். உளுந்து விவசாயத்தில் வேளாண் துறை போதிய கவனம் செலுத்துவது இல்லை. இதுவே உளுந்து விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்காமல் போவதற்குக் காரணம் என்கிறார்கள் விவசாயிகள்.

இதுகுறித்து மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், இந்த ஆண்டு உரிய நேரத்தில் டி.ஏ.பி. கரைசல் தெளிக்க, வேளாண் துறை டி.ஏ.பி. உரத்தை

பெற்றுத் தரவில்லை. காலம் கடந்து டி.ஏ.பி. உரத்தைத் தருவித்து, ஒன்றியத்துக்கு 600 முதல் 700 டன்கள் வரை, வேளாண் சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைத்து உள்ளனர். தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில் விவசாயிகளுக்கு, டி.ஏ.பி. உரம் 50 சதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. சிதம்பரத்தில் உளுந்து விற்பனைக்கு, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்தும் பயனில்லை. இதனால் தனியார் வியாபாரிகள் போட்டியின்றி குறைந்த விலைக்கு உளுந்து கொள்முதல் செய்கிறார்கள். மேலும் டெல்டா பாசனப் பகுதிகளில் உளுந்தை, ஊடுபயிராக விதைப்பதற்குப் பதில், சம்பா அறுவடைக்குப்பின், தனிப்பயிராக விதைத்தால் மகசூல் அதிகரிக்கவும் நல்ல விலை கிடைக்கவும் வாய்ப்பு இருப்பதாகக் கூறிவருகிறோம். ஆனால் எங்கள் கருத்தை வேளாண் துறை காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

கடலூர் மாவட்ட டெல்டா பகுதிகளில் சம்பா அறுவடைக்குப்பின் உளுந்தை மானாவாரி தனிப்பயிராக சாகுபடி செய்யலாம் என்பதை, செயல்முறை விளக்கம் மூலம் வேளாண் துறைக்கு எடுத்துரைக்க, இந்த ஆண்டு 300 ஏக்கரில் 15 விவசாயிகள் இணைந்து, உளுந்தை தனிப்பயிராக சாகுபடி செய்து இருக்கிறோம். விதைக்கும்போது ஒருமுறை மட்டும் தண்ணீர் பாய்ச்சினால் போதும். பயிர் செழிப்பாக உள்ளது. மே மாதத்தில் அறுவடைக்கு வரும். நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது என்றார் ரவீந்திரன்.

## டிரான்ஸ்பார்மர் பழுது: கருகும் நிலையில் நெற் பயிர்கள் ஜி.யோகானந்தம்

First Published : 26 Mar 2012 02:00:33 AM IST



மாம்பாக்கசத்திரம் கிராமத்தில் தண்ணீரின்றி கருகி வரும் சவுக்கு செடிகள். (நடுப்படம்) நீரின்றி கருகி வரும் நெற் பயிர்கள். (வலது படம்) வாடிய நிலையில் உள்ள

திருத்தணி, மார்ச் 25: டிரான்ஸ்பார்மர் பழுதாகி 20 நாள்கள் ஆகியும் மாற்று ஏற்பாடு செய்யப்படாமல் உள்ளதால் நீரின்றி சுமார் 30 ஏக்கர் நெற் பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திருத்தணி ஒன்றியத்துக்கு உள்பட்ட மாம்பாக்கம் ஊராட்சியில் உள்ளது மாம்பாக்கசத்திரம் கிராமம். இக்கிராமத்தில் சுமார் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் விவசாயம் செய்து

வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பியே வாழ்கை நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் பெய்த பருவ மழையால், விவசாயிகள் தங்களது நிலத்தில், நெல், வேர்க்கடலை, பச்சை மிளகாய் மற்றும் காய்கறி வகை பயிர்களை பயிரிட்டுள்ளனர்.

மாம்பாக்க சத்திரம் கிராமத்தில் வீடுகளுக்கென்று ஒரு தனி டிரான்ஸ்பார்மரும், விவசாய நிலத்திற்க்கென ஒரு தனி டிரான்ஸ்பார்மர் உள்ளது. இதில் விவசாய நிலத்துக்குப் பயன்படும் டிரான்ஸ்பார்மர் கடந்த 20 நாள்களுக்கு முன்பு பழுதானது. அதைத்தொடர்ந்து திருத்தணி மின் வாரி அதிகாரிகளுக்கு டிரான்ஸ்பார்மர் பழுதான தகவல் தெரிவிக்கப்பட்டது.

மின்வாரி அலுவலர்களும் கிராமத்துக்கு நேரில் வந்து மின் கம்பத்தில் இருந்த மின்சார டிரான்ஸ்பார்மரை கீழே இறக்கிப் பார்த்தபோது டிரான்ஸ்பார்மர் முழுவதும் எரிந்த நிலையில் இருந்தது. இதைத்தொடர்ந்து இன்னும் சில நாள்களில் புதிய டிரான்ஸ்பார்மரை மாற்றி தருகிறோம் என கிராம விவசாயிகளிடம் கூறி பழுதான டிரான்ஸ்பார்மரை எடுத்துச் சென்றனர். ஆனால் இதுநாள் வரையில் புதிய டிரான்ஸ்பார்மரைப் பொருத்தவில்லை.

இதுகுறித்து கிராம விவசாயி ஒருவர் கூறுகையில், விவசாய கிணறுகளுக்கு வழங்கும் மும்முனை மின்சாரம், பகலில் 6 மணி நேரம், இரவு நேரத்தில் 8 மணி நேரம் என 14 மணி நேரம் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது நிலவி வரும் கடும் மின் பற்றாக்குறையால், பகலில் 3 மணி நேரம், இரவில் 3 மணி நேரம் என, தினமும் 6 மணி நேரம் மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால், விவசாயிகள் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குறைந்த நேரம் மும்முனை மின்சாரம் வழங்குவதால், விவசாயிகள் தங்களது பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் ஏற்கெனவே அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் கிராமத்தில் உள்ள டிரான்ஸ்பார்மர் கடந்த 20 நாள்களுக்கு முன் பழுதானது. ஏற்கெனவே இந்த டிரான்ஸ்பார்மர் பல முறை பழுதாகியுள்ளது. அடிக்கடி பழுதாகும் இந்த டிரான்ஸ்பார்மரை மாற்றி புதிய டிரான்ஸ்பார்மர் பொருத்த வேண்டும் என பல முறை திருத்தணி மின்வாரிய அலுவலக உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இதனால் சுமார் 30 ஏக்கர் நெற்பயிர்கள் கருகி வருகின்றன என்றார் அவர்.

இதுகுறித்து மின்வாரிய அலுவலர் ஒருவர் கூறும் போது: மாம்பாக்கசத்திரத்தில் டிரான்ஸ்பார்மர் பழுதானது குறித்து திருத்தணி மின்வாரிய உயர் அதிகாரிகளிடமும், காஞ்சிபுரம் மின்வாரிய உயர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளோம். அங்கும் இதே போல் பிரச்னை நிலவி வருவதாகவும், புதிய டிரான்ஸ்பார்மர் வந்ததும் அனுப்பிவைப்பதாகவும் அவர்கள் கூறினர். அதனால் புதிய டிரான்ஸ்பார்மர் கிடைக்க இன்னும் சில நாள்கள் ஆகலாம் என்றார் அவர்.

மாவட்ட ஆட்சியர் தலையிட்டு துரித நடவடிக்கை எடுத்து, கருகி வரும் பயிர்களை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாம்பாக்கசத்திரம் கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தோட்டக்கலைப் பயிர்களில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்**

First Published : 25 Mar 2012 03:09:08 AM IST



ஊத்துக்கோட்டை தாலுகாவில் பயிரிடப்பட்டுள்ள ரோஜா.

திருவள்ளூர், மார்ச் 24: திருவள்ளூர் மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சென்னை மாநகரை ஒட்டியுள்ள திருவள்ளூர் மாவட்டம் விவசாயத்துக்கும் பெயர் பெற்றதாகும். நெல், கரும்பு போன்றவை அதிக அளவில் இம்மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டன. ஆனால் மேற்கண்ட இரு பயிர்களையும் சாகுபடி செய்ய அதிக உரம், தண்ணீர் தேவைப்படுவதால் செலவும் அதிகமாகிறது. தற்போது மாவட்டத்தில் அதிகளவில் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டடு வருகின்றன. கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருவள்ளூர் வட்டங்களில் புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் விவசாயப் பணிகளுக்கு தொழிலாளர்கள் கிடைப்பதும் அரிதாகி விட்டது.

அனைவரும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் (100 நாள்கள்) பணிக்கு ஆள்கள் சென்று விடுவதால் கிராமங்களில் விவசாயப்பணிக்கு ஆள்கள் கிடைப்பதில்லை. இதனால் விவசாய நிலங்கள் வைத்திருப்போர் அவற்றை வீட்டுமனைகளாக்கி வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்டித் தரும் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

குறிப்பாக பூண்டி ஒன்றியம் பிளேஸ்பாளையம், அரும்பாக்கம், நக்கல்கோனா, கங்குலகண்டிகை, ராஜபாளையம், கூனிபாளையம், டிபி புரம், புதுக்கண்டிகை, மேட்டுப்பாளையம், களக்கவாடி, ஊத்துக்கோட்டை தாலுகா, திருத்தணி அருகே மேல்நல்லாட்டூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் ரோஜா, சாமந்தி, சம்பங்கி, முல்லை, மல்லி பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இவற்றுக்கு குறைந்த அளவே உரம் தேவைப்படுகிறது. நீரின் தேவையும் குறைவாகும். நாள்தோறும் பூக்கள் பூத்து வருவதால் லாபம் கிடைக்கிறது. சென்னை கோயம்பேடு, வேலூர், மார்க்கெட்டுகளுக்கு நேரடியாக இங்கிருந்தே பூக்கள் அனுப்பப்படுகின்றன.
தற்போது தோட்டக்கலைத்துறை மூலம் மலர்ச்செடிகளுக்கும் அதிகளவில் மானிய உதவி வழங்கப்படுவதால் விவசாயிகள் அவற்றை பயிரிடுவதில் அதிக ஈடுபாடு காட்டி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## உழவர் வயல்வெளி பள்ளி தொடக்கம்

First Published : 25 Mar 2012 03:06:45 PM IST

புதுச்சேரி, மார்ச் 24: புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் அண்மையில் தொடங்கப்பட்டது.
÷இப் பள்ளியை பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலை திட்ட ஒருங்கிணைப்பாளர் அ.ராமமூர்த்தி தொடங்கி வைத்தார்.÷இவ் விழாவில் வேளாண்துறை கூடுதல் இயக்குநர் ஜி.சிவப்பிரகாசம், துணை வேளாண் இயக்குநர் எச்.ஜாகீர் உசேன், வேளாண் அறிவியல் நிலைய இளநிலை பூச்சியல் விஞ்ஞானி ஜெ.கிருஷ்ணகுமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.
÷வேளாண் அறிவியல் நிலைய பூச்சியல் வல்லுநர் விஜயகுமார், பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். 1995-ம் ஆண்டு முதல் நெல் பயிர்களுக்கு 138 வயல்வெளிப் பள்ளிகளும், பருத்திக்காக 4 பள்ளிகளும், மணிலாவுக்காக 40 பள்ளிகளும், காய்கறிகளுக்காக 3 பள்ளிகளும், வாழைக்காக ஒரு பள்ளியும் தொடங்கப்பட்டு விவசாயிகளுக்கு வேளாண் அறிவியல் நிலையம் பயிற்சி அளித்து வருகிறது.

## கோபியில் ரூ.5.5 லட்சத்துக்கு கொப்பரை விற்பனை

First Published : 25 Mar 2012 11:51:27 AM IST

கோபி, மார்ச் 24: கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.5.5 லட்சத்துக்கு கொப்பரை விற்பனை நடைபெற்றது.
கோபி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை ஏலம் வாரம் தோறும் நடைபெற்று வருகிறது.

இதில் கோபிசெட்டிபாளையம், பங்களாப்புதூர், காசிபாளையம், குருமந்தூர், சிறுவலூர், கடுக்காம்பாளையம், அளுக்குளி, வெள்ளாங்கோவில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த 60 விவசாயிகள், 281 மூட்டைகள் கொப்பரையை விற்பனைக்காகக் கொண்டு வந்திருந்தனர்.

குவிண்டால் அதிகபட்சமாக ரூ.4,236-க்கு விற்பனை ஆனது. கிலோ ரூ.42.36 வரை விற்பனை ஆனது. குறைந்தபட்ச விலையாக குவிண்டால் ரூ.3,919-க்கு விற்பனை ஆனது. இது கிலோவுக்கு ரூ.39.19 ஆகும். சராசரி விலையாக, குவிண்டால் ரூ.4,183-க்கு விற்பனை ஆனது. மொத்தம் ரூ.5.5 லட்சத்துக்கு விற்பனை ஆனது.

கோபி, சத்தி, பெருந்துறை, முத்தூர், தாராபுரம், வெள்ளக்கோவில், திருப்பூர் கோவை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கொப்பரை வாங்கிச் சென்றனர்.

கடந்த வாரத்தைக் காட்டிலும், இந்த வாரம் 42 மூட்டைகள் கொப்பரை குறைவாக விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டு இருந்தது.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**வரத்து குறைவால் ஏல சந்தைகளில் தேயிலை விலை அதிகரிப்பு - பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -**

மார்ச் 25,2012,23:59



வறண்ட வானிலை மற்றும் வரத்து குறைவால், கோல்கட்டா ஏல மையத்தில், தேயிலை விலை,46 - 55 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.சென்ற ஆண்டு, முதல் தரமான அசாம் தேயிலை விலை,

கிலோ 150 -200 ரூபாய் வரை சென்றது. நடப்பாண்டில், 220-280 ரூபாய் என்ற அளவில் உள்ள இத்தேயிலையின் விலை, 300 ரூபாய் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
தற்போது, புதிய பருவத்தில் விளைந்த தேயிலை சந்தைக்கு வந்துள்ளது. இதை, கிலோ ஒன்றுக்கு,கூடுதலாக 50-60 ரூபாய் வைத்து விற்பனை செய்கிறோம். ஆண்டின் பிற்பாதிக்குப் பிறகு, நல்ல அளவில் மழை பொழிந்து, விளைச்சல் அதிகரிக்கும் பட்சத்தில், கிலோவுக்கு 25-30 ரூபாய் வரை குறைய வாய்ப்புள்ளது என, மெக்லியாட் ரசல் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆதித்ய கெய்தான் தெரிவித்தார்.
சென்ற ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தேயிலை உற்பத்தி தலா 30 சதவீதம் வரை குறைந்துள்ளது என, இந்திய தேயிலை கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. நடப்பாண்டில், இந்தியாவில், ஒட்டு மொத்த அளவில், தேயிலைக்கான பற்றாக்குறை, 5 கோடி கிலோவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் தேயிலை உற்பத்தி, 2.3 சதவீதம் உயர்ந்து, 98.80 கோடி கிலோவாக அதிகரித்த போதிலும், பயன்பாடு, 3-3.5 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. இதனால், தேயிலைக்கு பற்றாக்குறை ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
சர்வதேச நிலவரம்:கடந்த 2011ம் ஆண்டில், சீனா தவிர்த்த,சர்வதேச அளவிலான தேயிலை உற்பத்தி, அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் சரிவடைந்துள்ளது. உலகளவிலான தேயிலை உற்பத்தி, 1.31 சதவீதம் சரிவை சந்தித்து, 196.96 கோடி கிலோவிலிருந்து, 194.38 கோடி கிலோவாக குறைந்துள்ளது.சர்வதேச சந்தையிலும், உள்நாட்டிலும் தேயிலைக் கான தேவை அதிகரித்து வருகிறது. அதே சமயம் தேயிலைக்கு பற்றாக்குறை உள்ளதால், அதன் விலை அதிகரித்தே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
தேயிலை விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்தால், தேயிலையை பாக்கெட்டில் அடைத்து விற்கும் நிறுவனங்கள், விலையை மறுபரிசீலனை செய்யும் என தெரிகிறது. பொதுவாக, இவ்வகையான வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவ னங்கள், முதல் தரமான தேயிலையை கொள்முதல் செய்வதில்லை. இதனால், இந்நிறுவனங்கள் அடிக்கடி விலையை மாற்றி நிர்ணயிப்பதில்லை. ஒரு ஆண்டிற்கு முன்புதான், இந்நிறுவனங்கள், தேயிலை விலையை உயர்த் தின என்பது குறிப்பிடத்தக்கது.

## வட மாநிலத்துக்கு செல்லும் ஓசூர் கேரட்

மார்ச் 25,2012,23:57



ஓசூர்:ஓசூரில் உற்பத்தியாகும் கேரட், வடமாநிலங்களில் ஜூஸ், அல்வா மற்றும் கேரட் சாதம் தயாரிக்க அதிகளவு அனுப்பி வைக்கப்படுகிறது. கேரட்டில் புற்றுநோய் எதிர்ப்பு சக்தி உள்ளதால், வடமாநிலத்தவரின் உணவு வகைகளில் கேரட் தவறாமல் இடம் பெறுகிறது.கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் ஆண்டு முழுவதும் காணப்படும் குளிர்ந்த காலநிலை, நல்ல மண்வளம் ஆகியவற்றை பயன்படுத்தி, விவசாயிகள் அதிகளவு மருத்துவ குணம் கொண்ட தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்கின்றனர்.

குறிப்பாக ஓசூர், தேன்கனிக்கோட்டை, பேரிகை, பாகலூர், உத்தனப்பள்ளி மற்றும் தளி பகுதியில், 200 ஹெக்டேரில் விவசாயிகள் ஆண்டு முழுவதும் கேரட் சாகுபடி மேற்கொள்கின்றனர்.தமிழகத்தை பொறுத்தவரையில் கேரட் சாகுபடி பரப்பு மிக குறைவாக உள்ளது. அதனால், உற்பத்தி குறைவால் காய்கறி சந்தைகளில் ஆண்டு முழுவதும் கேரட் விலை நிலையாக காணப்படுகிறது.இதனால், ஓசூர் பகுதி விவசாயிகள் ஆர்வமுடன் கேரட் சாகுபடியில் ஈடுபடுகின்றனர். ஒரு ஏக்கர் கேரட் சாகுபடி செய்ய, 50 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. மகசூலை பொறுத்தவரையில் ஆறு டன் வரை உற்பத்தியாகிறது. ஒரு டன்னுக்கு, 15 ஆயிரம் ரூபாய் வரை கிடைப்பதால், 90 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் வரை வருமானம் கிடைக்கிறது. சாகுபடி செலவு போக, 40-50 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது.

தமிழகத்தை பொறுத்தவரை அன்றாட சமையலில் மட்டுமே கேரட் முக்கிய பங்கு வகிக்கிறது. வடமாநிலங்களில் கேரட் அல்வா, கேரட் சட்னி, கேரட் சாதம், கேரட் ஜூஸ் உள்ளிட்ட பல்வேறு விதவிதமான உணவு வகைகள் தயாரிக்கப் படுகின்றன. கேரட்டில் உள்ள கரோட்டின் சத்து புற்றுநோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. குடல் புண், வயிறு வலி உள்ளவர்கள், வாரம் மூன்று முறை கேரட் சாறு அருந்தினால் நோய் குணமாகிவிடுகிறது. கேரட்டில் நார் சத்து உள்ளதால், செரிமானத்தை தூண்டி உணவு சீராக ஜீரணிக்க உதவுகிறது.

ஓசூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சீனிவாசன் கூறியதாவது: தமிழகத்தை பொறுத்தவரையில் சமையலில் உணவு பிரியர்கள் கேரட்டை அதிகளவு பயன்படுத்த மாட்டார்கள். அதனால், விவசாயிகள் ஆண்டுதோறும் குறைந்த பரப்பில் மட்டுமே கேரட் சாகுபடி செய்கின்றனர். இதனால், உள்ளூர் சந்தைகள் முதல் வெளியூர் சந்தைகள் வரை கேரட் விலை எப்போதும் கிலோ, 20 ரூபாய் முதல், 30 ரூபாய் வரை காணப்படுகிறது. ஒருபோதும் விலை வீழ்ச்சியடையாது. குளிர்பகுதியில் மட்டுமே கேரட் வரும்என்பதால், ஓசூர் போன்ற பகுதியில் மட்டுமே கேரட் நிரந்தரமாக சாகுபடி செய்யப்படுகிறது என்றார்.

## பட்டு வளர்ச்சி இயக்குனர் ஆய்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2012,00:03 IST

கருத்தை பதிவு செய்ய

செஞ்சி :அனந்தபுரம் கிராமத்தில் அரசுத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.
தமிழக அரசின் கைத்திறி, கைவினை, துணி நூல் மற்றும் கதர் துறை அரசு செயலாளர் சந்தானம், பட்டு வளர்ச்சித்துறை இயக்குனர் பிரபாகரன் ஆகியோர் செஞ்சி பட்டு வளர்ச்சித்துறை தொழில் நுட்ப சேவை மையத்தின் கீழ் வரும் பகுதிகளில் ஆய்வு செய்தனர்.
செஞ்சி அடுத்த கோவிந்தாபுரம், அனந்தபுரம் பகுதியில் பட்டு புழு வளர்ப்பிற்காக விவசாயிகள் பயிரிட்டுள்ள மல்பெரி தோட்டங்களை பார்வையிட்டனர்.
வேலூர் மண்டல துணை இயக்குனர் மணி, உதவி பட்டு ஆய்வாளர் கந்தசாமி, இளநிலை ஆய் வாளர் சந்திரசேகரன், முன்னோடி விவசாயிகள் அனந்தபுரம் ராமச்சந்திரன், தண்டபாணி ஆகியோர் உடனிருந்தனர்.

## பருத்தி ஏலம் விடும் நாள் திங்கட்கிழமைக்கு மாற்றம்

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2012,07:20 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்து வரும் பருத்தி ஏலம் விடும் நாள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஞாயிற்றுக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடந்து வந்தது. இங்கு நடக்கும் ஏலத்தில் தரமான பருத்தி கிடைப்பதால், வெளி மாவட்டத்தை சேர்ந்த பருத்தி வியாபாரிகள், அதிக விலைகொடுத்து பருத்தியை வாங்கிச் செல்வர்.
இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை நடந்து வந்த பருத்தி ஏலத்தை, வெள்ளிக் கிழமைக்கு மாற்றம் செய்து, சில வாரங்களாக ஏலம் நடந்து வந்தது. இந்நிலையில், நிர்வாக நலன் கருத்தி, வெள்ளிக்கிழமை நடந்து வந்த பருத்தி ஏலம், திடீரென திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது. அதனால், வெளி மாவட்டம் மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள், வெள்ளிக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வந்த, 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பருத்தி மூட்டைகளை, கூட்டுறவு சங்க வளாக களத்தில் அடுக்கிச் சென்றுள்ளனர். அதற்கான ஏலம் இன்று நடக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாம்பழம் பழுக்க வைக்க புதிய முறை சேலம் பழ வியாபாரிகள் முடிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2012,07:15 IST

கருத்தை பதிவு செய்ய

சேலம்: சேலம் மாவட்டத்தில், மாம்பழ சீஸன் துவங்கி உள்ளது. இந்நிலையில் மாம்பழங்கள் பழுக்க வைக்கும் முறையில், வியாபாரிகள் கடை பிடித்து வரும் நுட்பங்களினால் ஏற்படும் பாதிப்பு குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது.

கூட்டத்துக்கு சேலம் மாநகர மாங்காய் மற்றும் பழ வியாபாரிகள் சங்கத் தலைவர் குப்புசாமி, செயலாளர் உமாபதி ஆகியோர் தலைமை வகித்தனர். கூட்டத்தில், மாம்பழங்களை கார்பைட் கல் பயன்படுத்தி பழுக்க வைப்பதால், ஏற்படும் பாதிப்புகள் குறித்து, அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். அதை ஏற்ற வியாபாரிகள், கார்பைட் கற்களுக்கு மாற்றாக, எத்திலீன் காஸை பயன்படுத்துவது என முடிவு செய்தனர்.

உடலுக்கு தீங்கு இல்லாத இந்த முறைக்கு, அதிகாரிகள் அனுமதி வழங்கியதை அடுத்து வியாபாரிகள் கார்பைட் கற்களை பயன்படுத்த மாட்டோம் என, எழுத்து பூர்வமான உறுதிமொழியை அதிகாரிகளுக்கு வழங்கினர். சேலம் மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நியமன அதிகாரி டாக்டர் அனுராதா, உணவு பாதுகாப்பு அதிகாரி ராஜமாணிக்கம், பாலு மற்றும் பழ வியாபாரிகள் சங்க நிர்வாக குழு உறுப்பினர்கள், சேசாசலம், சீனிவாசன், செல்வராஜ், ஆறுமுகம், மணிகண்டன், தயாளன், ராமக்கா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து பழவியாபாரிகள் சங்க செயலாளர் உமாபதி கூறியதாவது: உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அறிவுரைப்படி, பழங்களை பழுக்க வைக்க, கார்பைட் கற்களை பயன்படுத்துவது இல்லை என, முடிவு செய்துள்ளோம். சங்கத்தின் இந்த முடிவுக்கு அனைத்து வியாபாரிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எத்திலீன் காஸை பயன் படுத்திக்கொள்ள அதிகாரிகள் அனுமதி வழங்கி உள்ளதால், இந்த புதிய முறைப்படி, பழங்களை பழுக்க வைக்கலாம், என்றார்.

**இயற்கை விவசாயத்தை பாதுகாக்க வேண்டும் : முன்னாள் துணைவேந்தர் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2012,05:46 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: ""பராம்பரிய இயற்கை விவசாயத்தை பாதுகாக்க அரசு கொள்கையில் மாற்றம் வேண்டும்," என்று மனோன் மணியம் சுந்தரனார் பல்கலையின் முன்னாள் துணைவேந்தர் வேதகிரி தெரிவித்தார்.

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனத்துறை அமைச்சகம் மற்றும் கடத்தூர் ஆர்.டி.எஸ்., தொண்டு

நிறுவனம் சார்பில் கடத்தூரில் தேசிய சுற்றுசூழல் விழிப்புணர்வு முகாம் நடந்தது. ஆர்.டி.எஸ்., தொண்டு நிறுவன இயக்குனர் தர்மலிங்கம் தலைமை வகித்தார். ஆர்.டி.எஸ்., சுகாதார பணியாளர் உண்ணாமலை வரவேற்றார். தர்மபுரி நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் கணேசன், பல்லவன் வங்கி மேலாளர் ரமேஷ், இயற்கை ஆர்வலர் மகேந்திரன், திரு.வி.க., அறக்கட்டளை நிறுவனர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தனர்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலையின் முன்னாள் துணைவேந்தரும், முன்னாள் ரிசர்வ் வங்கியின் இயக்குனருமான வேதகிரி சண்முக சுந்தரம் பேசியதாவது; இந்தியா வருங்காலத்தில் உணவு பற்றாக்குறையால், பஞ்சத்தையும், பட்டினி சாவையும் சந்திக்கும் சூழ்நிலை ஏற்படும். அதேநேரத்தில் உலகில் மக்கள் தொகையில் முதலிடத்தில் உள்ள சீனாவில் உணவு பஞ்சம் வராது. காரணம் அந்நாட்டு அரசின் வேளாண்மை கொள்கை சிறப்பாக உள்ளது. இந்தியாவில் விவசாயிகள் பராம்பரிய விவசாயத்தை தவிர்த்து ரசாயன உரங்களையும், ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பயன்படுத்தி மண் வளத்தை அழித்து விட்டனர்.

குறிப்பாக நெல், கோதுமை, ராகி, கம்பு ஆகிய உணவு தானியங்கள் ரசாயன உரத்தால் நச்சுத்தன்மை கொண்டதாக மாறியுள்ளது. இதனால், இந்த உணவு தானியங்களை சாப்பிடும் பொதுமக்களுக்கு புதுப்புது நோய்கள் வருகிறது. இன்றைய சூழ்நிலையில் மக்கள் சம்பாதிக்கும் பணம் மருத்துவ செலவுக்கே செலவாகிறது. சேமிப்பு குறைந்துள்ளது. கிராம மக்களுடைய விருப்ப உணவான ராகி, சோளம், கம்பு, வரகு, தினை போன்ற சிறு தானியங்கள் உற்பத்தி குறைந்து விட்டது. வருங்கால சந்ததியினர் இந்த உணவு தானியங்களை காட்சி பொருளாக பார்க்கும் அவலம் ஏற்படும்.

அதனால், மத்திய அரசு பாரம்பரிய இயற்கை விவசாயத்தை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் அரசு கொள்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டும். இயற்கை விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உலகில் தட்பவெப்ப நிலை மாற்றத்தால் இயற்கை பாதிப்புகள் அதிகளவில் நடக்கிறது. மழை, காற்றும், புயல், பணி ஆகியவை குறிப்பிட்ட காலத்தை தவிர எப்போது வேண்டுமென்றாலும் வருகிறது. இதனால், எதிர்பாராத பேரழிவால் மனித சமுதாயம் பாதிப்பு அடைகிறது. இயற்கை பேரழிவை தடுக்க வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும். மரம் வளர்ப்பதால் தட்பவெப்ப நிலை சீராக இருக்க உதவும். இவ்வாறு அவர் பேசினார்.

## மல்லிகை விலை வீழ்ச்சிசாமங்கி பூ விலை விர்ர்...

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2012,07:15 IST

ஈரோடு: ஈரோட்டில் பல மாதமாக உச்சத்திலிருந்து மல்லிகை பூ விலை குறைந்து, சாமங்கி பூ விலை உயர்ந்துள்ளது.பொதுவாக மழை, குளிர்காலத்தில் மல்லிகை வரத்து குறைந்து விலை

அதிகரிக்கும். ஈரோட்டில் கடந்த ஒன்றரை மாதம் முன்பு வரை மல்லிகை கிலோ 600 ரூபாயிலிருந்து அதிகபட்சமாக முகூர்த்த நாட்களில் 1,200 ரூபாய்க்கு கூட விற்கப்பட்டது. தற்போது குளிர்காலம் முடிந்து, வெயில் காலம் துவங்கியுள்ள நிலையில், ஈரோட்டுக்கு பவானி, அந்தியூர் பகுதியில் இருந்து மல்லிகை வரத்து அதிகரித்துள்ளது.ஈரோடு மாநகரில் கடந்த ஒரு வாரமாக மல்லிகை கிலோ 100 முதல் 150 ரூபாய்க்குள் மட்டுமே உள்ளது. ஒரே மாதத்தில் 9 மடங்கு வரை விலை குறைந்தததால், மீண்டும் பழையபடி மல்லிகையை மக்கள் அதிகமாக விரும்பி வாங்கத் துவங்கிவிட்டனர்.
அடுத்த மூன்று மாதங்களுக்கு மல்லிகை பூ சீஸன் என்பதால், வரத்து அதிகமாக காணப்படும். விலையும் ஏற்றமின்றி தற்போதைய நிலையிலேயே இருக்குமென வியாபாரிகள் தெரிவித்தனர். அதேவேளை வெயில் காலத்தில் சாமங்கி பூ வரத்து குறைந்துவிட்டதால், கிலோ 40, 50 ரூபாய்க்கு விற்ற அந்த பூவின் விலை தற்போது 150 முதல் 180 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இவை தவிர மற்ற பூக்களின் விலை மிதமாக உள்ளது.

## பச்சை காய்கறிகளை உட்கொள்ளுங்கள்இலவச மருத்துவ முகாமில் யோசனை

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2012,07:17 IST

ஈரோடு: ஈரோடு பெருந்துறை ரோட்டில் உள்ள மாருதி மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனையில், ஈரோடு டயாபடிஸ் பவுண்டேஷன், கோவை அரவிந்த கண் மருத்துவமனை உதவியுடன் சர்க்கரை நோயாளிகளுக்கான இலவச கண் சிகிச்சை முகாம் நேற்று நடந்தது. எம்.எம்.சி.எச்., சேர்மன் சதாசிவம் தலைமை வகித்தார். கேட்ராக்ட், கிளாக்கோமா, ரெட்டினோபதி பரிசோதனைகள் செய்யப்பட்டது. கண் பாதுகாப்பு, கண் பராமரிப்பு குறித்த ஆலோசனை வழங்கப்பட்டது.
"சர்க்கரை நோயாளிகளுக்கு கண் தொடர்பாக வரும் நோய்களை வருமுன் காப்போம்,' என்ற தலைப்பில், எம்.எம்.சி.எச்., சர்க்கரை நோய் மருத்துவர் செந்தில்வேலு, ""கட்டுப்பாடற்ற சர்க்கரை நோய், அதிக ரத்த அழுத்தத்தால் கண்ணில் உள்ள ரத்த நாளங்கள் பழுதடைந்து, ரத்தக்கசிவு ஏற்படுவதால், விழித்திரை பாதிக்கப்படுகிறது. இதனால், தலைவலி, கண் வலி, கண் எரிச்சல், மங்கலான பார்வை, இரட்டை பார்வை, கரும்புள்ளி தோன்றுதல் போன்றவை ஏற்படுகிறது. சர்க்கரை நோயால் ஏற்படும் பாதிப்புக்கு, வெளிப்படையான அறிகுறிகள் தெரியாது. சர்க்கரை நோய் கட்டுப்பாட்டை கண்டறியும் பரிசோதனையை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை செய்து, டாக்டரிடம் ஆலோசனை பெற வேண்டும்.
தினமும் குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு முறை உணவு உண்ண வேண்டும். பச்சை காய்கறி, சூப், மோர், பச்சை பயறு போன்றவைகளை அதிகம் உட்கொள்ள வேண்டும்,'' என்றார்.

## விவசாயிகளுக்குபயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : மார்ச் 26,2012,07:14 IST

காங்கேயம்: சிக்கரசம்பாளையத்தில், விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

காங்கேயம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் மாணிக்கம் தலைமை வகித்து, விதை கிராமத்தின் முக்கியத்துவம், மானிய திட்டங்கள், நூறு சதவீத மானியத்தில் பாசன திட்டங்கள் குறித்து பேசினார். திருந்திய நெல் சாகுபடி முறை மற்றும் பயன்கள், மண் மாதிரி எடுத்தல் குறித்து நத்தகாடையூர் துணை வேளாண் அலுவலர் மோகனசுந்தரம் விளக்கினார்.

சிக்கரசம்பாளையம் மற்றும் சுற்றுப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஏராளமானோர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் முத்துசாமி, நடராஜன், பாஸ்கரன் ஆகியோர் செய்தனர்.

## குன்னூர் தேயிலை ஏலத்தில் மந்தம்

பதிவு செய்த நாள் : மார்ச் 25,2012,23:37 IST

குன்னூர் :குன்னூர் தேயிலை ஏல மையத்தில், வரத்து குறைந்தும் விலையில் பெரிய அளவிலான முன்னேற்றம் தென்படவில்லை.

குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 12க்கான ஏலம் நடந்தது. மொத்தம் 10.60 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது. இதில், இலை ரகம் 7.64 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 2.96 லட்சம் கிலோ அடங்கும். வழக்கமாக பங்கெடுக்கும் ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான், குஜராத் உட்பட உள்நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு ஓரளவு இருந்தது; அவர்கள் தரமான தேயிலை தூளை மட்டுமே வாங்கினர்.

ஏற்றுமதி வர்த்தகத்தில் பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே பங்கெடுத்தனர். விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 86 சதவீதம் விற்று தீர்ந்தது; கிலோவுக்கு 2 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

விலை நிலவரத்தை பொறுத்தவரை சி.டி.சி., ரக தூளுக்கு அதிகபட்சம் 122 ரூபாய், ஆர்தோடக்ஸ் ரகத்தில் அதிகபட்சம் 220 ரூபாய் விலை கிடைத்தது. இலை ரக விற்பனையில், சாதாரண ரக தூளுக்கு 50 - 55 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 85-154 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில், சாதாரண ரக தூளுக்கு 55 - 58 ரூபாய், சிறந்த ரகத்துக்கு 85-151 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 13ற்கான ஏலம் வரும் 29,30 தேதிகளில் நடக்கிறது. மொத்தம் 17.29 லட்சம்

கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

பசுந்தேயிலை விலையில் திருப்தி:

ஏல நிலவரம் இவ்வாறு இருப்பினும், விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு ஓரளவு நல்ல விலை கிடைத்து வருகிறது. முதல் தர பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 18-20 ரூபாய், இரண்டாம் தர பசுந்தேயிலைக்கு 13-15 ரூபாய், மூன்றாம் தர பசுந்தேயிலைக்கு 12 ரூபாய் விலை கிடைத்தது.

---

தினத் தந்தி

# ஊட்டி ரோஜா பூங்காவில் பூக்கள் மலரத்தொடங்கின

ஊட்டி, மார்ச்.26-

ஊட்டி ரோஜா பூங்கா வில் ரோஜா மலர்கள் பூக்கத்தொடங்கி உள்ளன.

### கோடை சீசன்

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் இன்னும் சில தினங்களில் தொடங்குகிறது. ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதியில் உள்ள பூங்காக்களில் சீசனுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஊட்டி தாவரவியல் பூங்கா வில் மே மாதம் மலர் கண் காட்சி நடக்கிறது. இதற்காக 3 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன. மேலும் 15 ஆயிரம் தொட்டி களிலும் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு உள்ளன.

### ரோஜா பூங்கா

இதே போல் ஊட்டி ரோஜா பூங்காவில் மே மாதம் ரோஜா கண்காட்சி நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஆசியாவிலேயே சிறந்த ரோஜா பூங்காவாக ஊட்டி ரோஜா பூங்கா விளங்குகிறது. இங்கு 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ரகங்களில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரோஜா செடிகள் உள்ளன.

இந்த ரோஜா செடிகள் கோடை சீசனுக்காக கடந்த சில நாட்களுக்கு முன்பு கவாத்து செய்யப்பட்டது. கவாத்து செய்யப்பட்ட ரோஜா செடிகளுக்கு தேவை யான உரங்கள் போடப் பட்டன. மேலும் மழை பெய்யாததால், தேவையான தண்ணீர் பாய்ச்சப்பட்டன.

### மொட்டுக்கள்

தற்போது ஊட்டியில் வெயில் அடிப்பதால், ரோஜா செடிகள் துளிர் விடுமா? பூக்கள் மலருமா? என்று சந்தேகமான நிலை ஏற்பட்டது. தோட்டக்கலை துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர் களின் பராமரிப்பு காரணமாக ரோஜா பூங்காவில் உள்ள மலர்கள் துளிர்விடத் தொடங்கின.

மேலும் தற்போது கவாத்து செய்யப்பட்ட செடிகள் நன்கு துளிர்விட்டு, பூக்கள் மலரத் தொடங்கி உள்ளது. ரோஜா பூங்காவில் உள்ள 30 ஆயிரத் துக்கும் மேற்பட்ட செடிகளில் சில செடிகளில் பூங்கள் மலர்ந் துள்ளன. அதே நேரத்தில் பல செடிகளில் மொட்டுக்கள் அரும்பி உள்ளன. இதனால் பெரும் பாலான செடிகளில் மொட்டுக்கள் காணப்படு கின்றன.

இதன் காரணமாக ஏப்ரல் மாதம் தொடக்கத்தில் ரோஜா பூங்காவில் பல செடிகளில் பூக்கள் மலர்ந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ஊட்டி ரோஜா பூங்காவில் பூக்கள் மலர தொடங்கி உள்ளதை படத்தில் காணலாம்.